வெருகல் பிரதேச சபை

திருகோணமலை மாவட்டம்

1. நிதிக்கூற்றுகள்

1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 ஏப்ரல் 05 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை மற்றும் முகாமைத்துவ அறிக்கை முறையே 2019 மே 16 ஆம், 2019 மே 31 ஆம் திகதிகளில் சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் வெருகல் பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) ரூபா 1,014,000 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் 2017 ஆம் ஆண்டு நிதிக்கூற்றில் வருமானமாக எடுக்கப்பட்ட போதிலும் மீண்டும் மீளாய்வாண்டிலும் அத் தொகை வருமானமாக எடுக்கப்பட்டுள்ளது. இதனால் மீளாய்வாண்டிற்கான வருமானம் அத்தொகையால் அதிகரித்துக்காட்டப்பட்டுள்ளது | அதிகரிக்கப்பட்ட மீளாய்வாண்டின் வருமானம் சீர் செய்யப்பட வேண்டும். | ரூபா 1,014,000 தொகையான நீதிமன்ற தண்டப்பணமானது இவ்வருடம் இரட்டைப்பதிவாக அமைந்தது. இத்தொகையானது 2019ம் ஆண்டு தயாரிக்கப்படும் இறுதிகணக்கறிக்கையில் திரண்ட நிதியில் சீர் செய்யப்படும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். |
| (ஆ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா.200,134 பெறுமதியான வாகன ரயர்கள் மூலதனச் செலவினமாகக் காட்டப்பட்டுள்ளதனால் நிலையான சொத்துக்களின் பெறுமதி அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டதுடன் | பிழையாக வகைப்படுத்தப்பட்ட விடயத்தினை சீர்செய்ய நடவடிக்கை எடுப்பதுடன் எதிர்வரும் ஆண்டுகளில் சரியான வகையில் வகைப்படுத்தல் மேற்கொள்ளப்படல் வேண்டும். | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட 200,134 பெறுமதியான வாகன டயர் கொள்வனவு இவ்வருடம் மூலதன செலவாக காட்டப்பட்டது. இத்தொகையானது அடுத்தவருடம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது உரிய கணக்குகளில் சீர் செய்யப்படும் என்பதை அறியத்தருகின்றேன். |

நடைமுறைச் செலவீனங்கள் அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

1.3.2 செலுத்த வேண்டிய கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 47,954 கூட்டுத்தொகையான 04 சில்லறைக் கடன்கொடுத்தோர் மீதிகள் கொடுத்துத் தீர்க்கப்படாது கடந்த 10 வருட காலமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது. | விபரங்கள் சேகரிக்கப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | 47,954 கூட்டு மொத்தத் தொகையான 04 சில்லறைக்கடன் கொடுநர்களுக்கும் மீதி தொடர்பான சரியான ஆவணங்கள் இல்லாமல் இருப்பதனால் இதனை எதிர்காலத்தில் வருமானத்திற்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன். |

1.3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை.

| கணக்கு விடயம் | பெறுமதி ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| முற்பணப் பெறுவனவு | 326,780 | விபரப் பட்டியல் | சான்றாவணங்கள் சபையில் இல்லை என்பதனை உறுதி செய்து மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதிக் கூற்றில் காட்டப்பட்டு வருகின்றது. இது தொடர்பான சான்றாவணங்கள் எமது சபையில் இல்லை. இதனால் இது தொடர்பான மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன். |
| ஏனைய முதலீடுகள் | 233,820 | | | |

1.4 இணங்காமைகள்

1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| அ) 1988ம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதியின் | ஆண்டுக்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவு திட்டத்துடன் | முரண்பாட்டு விளக்கங்கள் உள்ளடக்கிய கூற்று | ஆண்டுக்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான |

| | | | |
|---|---|---|---|
| அத்தியாயம் X பிரிவு 193 | ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | வரவு செலவுத்திட்டத்துடன் ஒப்பிட்டு முரண்பாட்டுக்கான அட்டவணை எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படும். |
| ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி பிரமாணம் பிரிவு 571 | இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 375,155 தொகையான கேள்வி, நணாவித, பிடிகாசு மற்றும் ஏனைய வைப்புக்கள் நிதிப்பிரமாணத்தின் படி கொடுத்து தீர்ப்பதற்கு அல்லது வருமானத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | ரூபா375,155 பெறுமதியான வைப்புக்கள் தொடர்பாக உரிய ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு பொருத்தமானவற்றை கொடுத்து தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத்தருகின்றேன். |

2. நிதி மீளாய்வு
-------------------------

2.1 நிதிசார் விளைவுகள்
-----------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா.1,344,198 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 4,074,709 ஆக இருந்தது.

2.2 வருமான நிர்வாகம்
--------------------------------

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்
--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான விடயம் | பாதீடு ரூபா "000" | ஆண்டுக்கான வருமானம் ரூபா "000" | பெறப்பட்ட வருமானம் ரூபா "000" | 2018.12.31 இல் நிலுவை ரூபா "000" | பாதீடு ரூபா "000" | ஆண்டுக்கான வருமானம் ரூபா "000" | பெறப்பட்ட வருமானம் ரூபா "000" | 2017.12.31 இல் நிலுவை ரூபா "000" |
| வாடகை | 1,684 | 922 | 1,253 | 505 | 609 | 1,130 | 1,157 | 632 |
| ஏனையவை | 3,990 | 1,849 | 2,863 | 256 | 3,513 | 160 | 2,899 | 1,279 |

மீளாய்வாண்டில் வாடகை நிலுவை மற்றும் ஏனைய நிலுவைகள் கடந்த வருடத்தை விட முறையே ரூபா 127,000 மற்றும் ரூபா 1,023,000 தொகையால் ஆல் குறைவடைந்துள்ளது.

2.2.2 வாடகை வருமானம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் கடைத்தொகுதியில் உள்ள D இலக்கக் கடை 2018 பெப்ரவரி 01 ஆம் திகதி வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டது. | | |
| (அ) இக்கடைக்கான வாடகை நிலுவை ரூபா 79,200 மற்றும் தண்டப்பணம் ரூபா 7,920 கூட்டுமொத்தமாக ரூபா 87,120 தொகையாக காணப்பட்ட போதிலும் இத் தொகையை கணக்காய்வுத் திகதியான 2019 மே 14 ஆம் திகதி வரை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாடகை நிலுவைகளை அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பதுடன் எதிர் வரும் காலங்களில் வாடகை நிலுவை ஏற்படாத வண்ணம் சபை உடனுக்குடன் நடவடிக்கைகளை எடுக்கப்படல் வேண்டும். | ரூபா 87,120 பெறுமதியான தொகையினை பகுதி பகுதியாக 03மாதங்களுக்குள் செலுத்துமாறு குறித்த வாடகையாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு குறித்த பணம் அறவிடப்படும் என்பதை அறியத்தருகின்றேன். |
| (ஆ) கடையினைப் பெற்றவரின் ஒப்பந்த முதிர்வு காலம் 2023 பெப்ரவரி 01 ஆம் திகதியாக காணப்பட்ட போதிலும் 2018 நவம்பர் மாதம் ஒப்பந்தம் இடைநிறுத்தப்பட்டது. ஒப்பந்தத்தின் இ பிரிவின் பிரகாரம் ஒப்பந்த காலத்திற்கு இடையில் ஒப்பந்தம் முடிவுறுத்தப்படுமாயின் பாதுகாப்பு பிணை மீளளிக்காது வருமானத்திற்கு மாற்றப்பட வேண்டும். எனினும் ரூபா 144,000 தொகையான பாதுகாப்பு பிணை வருமானத்திற்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தத்தின் இ பிரிவின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | குறித்த கடை தொடர்பாக தங்களின் பரிந்துரைகள் பின்பற்றப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன். |

2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அ) நீதிமன்றத் தண்டப்பணம் | | |
| மீளாய்வாண்டிற்கான மே மாதம் தொடக்கம் திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதிக்குரிய நீதிமன்ற தண்டப்பணத்தை கணிப்பீடு செய்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த காலங்களுக்கான நீதிமன்ற தண்டப்பணத்தை கணிப்பீடு செய்து அறவீடு செய்வதுடன் அறவீடுகளில் ஏற்படும் கால தாமதத்தினைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | மீளாய்வாண்டில் மே – திசெம்பர் வரையான காலப்பகுதிக்குரிய நீதிமன்ற தண்டப்பணத்தை பெற்றுக்கொள்வது தொடர்பாக உரிய திணைக்களங்களுக்கு நினைவூட்டல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

ஆ) முத்திரைக் கட்டணங்கள்

| | | |
|---|---|---|
| 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணத்தை கணிப்பீடு செய்து பதிவாளர் நாயகத்திடமிருந்து அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த காலங்களுக்கான முத்திரைக் கட்டணத்தை கணிப்பீடு செய்து அறவீடு செய்வதுடன் அறவீடுகளில் ஏற்படும் கால தாமதத்தினைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2016, 2017, 2018 ஆம் ஆண்டுக்குரிய முத்திரைத் தீர்வைகளை கணிப்பிட்டு பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப் பட்டுள்ளது. |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றுகை

(அ)நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி இலக்குச் சட்டத்தின் பிரகாரம் அதன் நோக்கம் மற்றும் இலக்கு என்பவற்றை சபையினால் அடையாளம் காணப்பட்டிருக்க வில்லை. மேலும் 2030 ஆம் ஆண்டில் அடையப்பட வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தொடர்பாக பொருத்தமான அறிவினை கொண்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான நிகழ்ச்சி நிரல் தயாரித்து அதனை அமுல்படுத்தப்படல் வேண்டும். | 2018 ஆம் ஆண்டிலே நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக எந்தவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. எனினும் எதிர்வரும் வருடங்களில் குறித்த சுற்று நிருபத்தின் பிரகாரம் அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின்றேன். |

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் பிறந்த பிள்ளைகளில் நிறை குறைந்து பிறந்தபிள்ளைகளின் விகிதமானது 2015, 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் முறையே 36, 40, 50 மற்றும் 55 ஆக காணப்பட்டிருந்தும் 2015 | இவ்விடயம் தொடர்பாக சபை அதிக அக்கறை உடையவர்களாக செயற்படல் வேண்டும். | இது தொடர்பாக 2019 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் தாய் சேய் சத்துணவு திட்டமொன்றை (இலைக்கஞ்சி) நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை வரவு செலவுத் திட்டத்தில் தாய் சேய் நலன் மற்றும் சிறுவர் பராமரிப்பிற்கென எந்தவொரு செலவீன ஒதுக்கீடும் ஏற்படுத்தப் பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக சபையானது தாய் சேய் நலன்களில் அக்கறை கொண்டிருக்கவில்லை. | | |
| (ஆ) அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் EST-8/UNIFO/06/0302/6 ஆம் இலக்க 2013 ஏப்ரல் 22 ஆம் திகதிய சுற்று நிருபத்தின் 2ஆம் பந்தியின் (அ) பிரிவின் பிரகாரம், தாபன விதி கோவையின் XXI அத்தியாயத்தின் படியும், அதன் தொடர்பில் வெளியிடப்பட்ட அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகளின் படியும் வழங்கப்பட்ட சீருடைத்துணிகள் மற்றும் தையல் கட்டணங்களுக்கு பதிலாக சாரதிகளுக்கும், அலுவலக உதவியாளர் சேவையில் இருக்கும் அலுவலகர்களுக்கு 2013 சனவரி 01 திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் ஆண்டு தோறும் ரூபா 4,000 பணமாக வழங்கப்பட வேண்டும். எனினும் மீளாய்வாண்டில் சபையில் காணப்படும் 27 ஊழியர்களில் 06 ஊழியர்களுக்கு மாத்திரமே இக்கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் ஊழியர்களுக்குரிய கொடுப்பனவுகள் வருடம் தோறும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | சீருடை கொடுப்பனவு வழங்கல் தொடர்பாக 2018 மே ஆண்டு வரவு செலவு திட்டத்தில் போதிய நிதி ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாகவே ஆறு பேருக்கு மாத்திரம் வழங்கப்பட்டது. தற்போது 2019 ஆம் ஆண்டில் போதியளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே சபையின் நிதி நிலைமைக்கேற்ப அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்படும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையில் சுகாதார தொழிலாளி ஆளணி வெற்றிடத்தை நிரப்புவதற்கு முதலமைச்சின் செயலாளரால் 2018 யூலை 25 ஆம் திகதியன்று நிரந்தர நியமனம் | சபைக்குரிய ஆளணியை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட | 2018 யூலை 25 நியமனம் தொடர்பாக ஆட்சேர்ப்பு பிரமாணக் குறிப்பின் சரத்துக்கள் மீறப்படாமையிகாலும் ஏற்களவே குறித்த வெற்றிடத்திற்காக |

| | | |
|---|---|---|
| வழங்கப்பட்டிருந்த போதிலும் சபையின் தவிசாளரால் அவ் ஊழியர் கடமையை பொறுப்பேற்க மறுக்கப்பட்டிருந்தார். இது தொடர்பாக சபை எவ்வித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | ஊழியரை உடனடியாக சபையில் கடமைகளை பொறுப்பேற்க வைப்பதுடன் ஆட்சேர்ப்பு தொடர்பான சரத்துக்கள் மீறப்பட்டமையினை உரிய முறையில் உறுதிப்படுத்த அவசியமானது | நீண்ட காலமாக ஒரு தொழிலாளி கடமையாற்றி கொண்டிருந்தமையினாலும் அவ் ஊழியர் கடமையை பொறுப்பேற்க மறுப்பு தெரிவிக்கப்பட்டது. |

## 3.4 சொத்து முகாமைத்துவம்

### 3.4.1 உரிமை மாற்றம் செய்யப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஏனைய நிறுவனங்களிடமிருந்து நன்கொடையாக பெற்றுக் கொள்ளப்பட்ட 07 வாகனங்கள் 08 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதும் அவற்றை சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிமை மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஏனைய நிறுவனங்களில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சொத்துக்களை சபையின் பெயருக்கு கூடிய விரைவில் மாற்றி கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. |

### 3.4.2 பயன்படுத்தப்படாமல் உள்ள சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சபைக்கு சொந்தமான ரூபா 2,272,800 பெறுமதியான 07 அறைகளைக் கொண்ட கடைத்தொகுதியானது 2011 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டின் இறுதி வரை எந்தத் தேவைக்கும் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்படுகின்றது. | விளைவற்றுக் காணப்படும் கடைத்தொகுதியை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ரூபா 2,272,800 பெறுமதியான கடைத்தொகுதியானது சபையின் பழைய பொருட்களை பூட்டி வைக்கும் களஞ்சியமாக பயன்படுத்தப்படுகின்றது. எதிர்காலத்தில் இவற்றை வாடகைக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன். |
| (ஆ) சபையில் காணப்படும் ரூபா 1,451,750 மொத்தப் பெறுமதியான உழவு இயந்திரம், இரண்டு சக்கர உழவு இயந்திரம், ரோட் ரோலர் மற்றும் முச்சக்கர வண்டி என்பன நான்கு வருட | திருத்தி பயன் படுத்துவதற்கோ அல்லது ஏலத்தில் விற்பனை செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இவற்றில் ஆட்டோ மற்றும் றோளர் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. ரக்ரர் திருத்தம் செய்வது தொடர்பாக சபையின் நிதி நிலமையினை பொறுத்து நடவடிக்கை எடுக்கப்படும் அல்லது தங்களின் |

| | | |
|---|---|---|
| காலமாக பயன்படுத்தப்படாது காணப்பட்ட போதிலும் அவற்றை திருத்தி பயன்படுத்துவதற்கோ அல்லது ஏலத்தில் விற்பனை செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | கருத்துரையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |

3.4.3 வருடாந்த இருப்புக் கணிப்பீடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டின் இருப்புக் கணக்கெடுப்பின் போது சபையினால் பராமரிக்கப்படும் நூலகத்தில் 143 புத்தகங்கள் தொலைந்தமை சுட்டிக்காட்டப்பட்ட போதிலும் அவை தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டு உத்தியோகத்தாரல் குறிப்பிடப்பட்ட விடயத்தை விரைவில் அமுல்படுத்தப்படல் வேண்டும். | குறிப்பிடப்பட்ட 143 புத்தகங்கள் குறைவு தொடர்பாக நூலகத்தில் கடமையாற்றும் ஊழியரிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளது. குறித்த புத்தகங்கள் தொடர்பான பெறுமதியை குறித் ஊழியரிடம் இருந்து அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின்றேன். |

3.5 பெறுகை

3.5.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் 128 ஆம் இலக்க 2006 மார்ச் 24 ஆம் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் சபையினால் மீளாய்வாண்டில் பெறுகை திட்டம் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | சபையினால் ஆண்டு தோறும் பெறுகை திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். | 2018 ஆம் ஆண்டு சபைக்கான பெறுகைத் திட்டம் முழுமையாக தயாரிக்கப்பட்டவில்லை. எனினும் 2019 ஆம் ஆண்டுக்கான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன். |

3.5.2 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சூரிய சக்தி விளக்கு திருத்தம்<br>புறநெகும செயற்திட்டத்தின் கீழ் 2014 யூன் 30 ஆம் திகதி பொருத்தப்பட்ட ரூபா 7,743,120 பெறுமதியான 80 சூரிய சக்தி விளக்குகளும் | | |

| | | |
|---|---|---|
| பழுதடைந்திருந்தமை காரணமாக அதில் 65 விளக்குகள் பிரதேச சபைகளை வலுவூட்டும் வேலைத்திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் ரூபா 2,731,000 தொகையில் திருத்தம் செய்வதற்கான ஒப்பந்தம் 2017 ஒக்தோபர் 27 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டது. இது தொடர்பான கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது. | பெறுகை நடைமுறை மேற்கொள்ளும் போது கட்டாயமாக பெறுகை வழிகாட்டி, சுற்றுநிருபங்கள் மீறப்படாது பின்பற்றப்பட வேண்டும். | |
| i. பெறுகை வழிகாட்டியின் பிற்சேர்க்கை (Supplementary) 2014 யூலை 04 ஆம் திகதிய 28 ஆம் இலக்கத்தின் பிரகாரம் வாங்குதல் நடைமுறை சபையினால் ரூபா 2,000,000 தொகை வரையே மேற்கொள்ள முடியும். எனினும் இதற்கு முரணான வகையில் இவ்வேலைத்திட்டத்திற்கு வாங்குதல் நடைமுறை பின்பற்றப்பட்டிருந்தது. இதனால் பெறுகை வழிகாட்டியின் 1.2.1 (II) இற்கான நோக்கம் அடைப்பட்டிருக்கவில்லை. | பராமரிப்பு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தால் அதனை எமக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சூரிய சக்தி விளக்கு திருத்தத்திற்கான ஒதுக்கீடு பிரதேசசபைகள் வலுவூட்டும் வேலைத்திட்டத்தின் மூலம் எமக்கு ஒக்டோபர் மாதத்திலே கிடைக்கப்பெற்றது. அவ்ஒதுக்கீட்டில் குறித்த வேலைத்திட்டத்தை 30.'.11.'.2017 க்குள் நிறைவுறுத்தி அமைச்சுக்கு அத்தினத்துள் செலவுப்பற்றுச்சீட்டை சமர்ப்பிக்கும் படி அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் குறித்த வேலையினை நிறைவுறுத்தி உள்ளுராட்சி ஆணையாளரினூடாக அனுப்புவதற்கான கால அவகாசம் போதாதிருந்ததாலும் அதனை பத்திரிகையில் விளம்பரப்படுத்தி விளம்பரக்கட்டணம் செலுத்துவதற்கான நிதி ஒதுக்கீடு இன்மையினாலும்,ஏற்கனவே பொருத்தப்பட்ட சூரிய சக்தி விளக்குகள் ஒழுங்காக எரியாமை தொடர்பாக அதனை விரைவாக திருத்தும்படி பொதுமக்களால் அடிக்கடி முறைப்பாடு செய்யப்பட்டதாலும் வாங்குதல் அடிப்படையிலே திருத்தம் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது. |
| ii. இத்திருத்த வேலைக்கான உடன்படிக்கையில் தொடர்ச்சியான பராமரிப்பு தொடர்பாக எவ்வித விடயங்களும் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. இதனால் விளக்குகள் பழுதடையும் போது மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்பட்டே திருத்த வேண்டிய நிலை ஏற்படும். | விளக்குகள் அனைத்தையும் இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | |
| iii. திருத்தம் செய்யப்பட்ட 65 விளக்குகளின் மின்கலங்கள் 2019 மார்ச் மாதம் கழற்றப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது 33 மின்கலங்கள் பரிசீலனை அறிக்கை நியமத்தை விட குறைவாகக் காணப்பட்டது. | | ஒப்பந்தத்தில் நிறுவனத்துடன் பாரமரிப்புக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்படாலும் திட்டத்தில் நிலைபேறான தன்மையை கருத்தில் கொண்டு வேறான பராமரிப்பு ஒப்பந்தம் அல்லது பொருத்தமான வேறொரு நடவடிக்கையை |

இது தொடர்பாக சபை எதுவித நடவடிக்கையினையும் இன்றுவரை எடுத்திருக்கவில்லை.

மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

திருத்தம் செய்யப்பட்ட 65 விளக்குகளில் சில எரிகின்ற நேரம் குறைவு என்பதால் அவற்றின் பெற்றரிகள் கழற்றி பெற்றியின் செயல்திறன் பரிசோதிக்கப்பட்டது. இதன் பிரகாரம் பெற்றிக்கான உத்தரவாக காலம் இருப்பதனால் குறித்த பிரச்சினை தொடர்பாக ஒப்பந்தகாரருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தகாரரின் பிடிபணம் எம்மிடம் உள்ளது. குறித்த விடயங்களை கருத்தில் கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

(ஆ) கேட்போர் கூடம் நிர்மாணம்
----------------------------------------------

மாகாண சபை மற்றும் உள்@ராட்சி அமைச்சின் பிரதேச சபைகளை வலுவூட்டும் தேசிய வேலைத்திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் கேட்போர் கூடம் நிர்மாணம் செய்வதற்கான ஒப்பந்தம் ரூபா 6,749,486 தொகைக்கு 2017 நவம்பர் 17 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்தது. அது தொடர்பான பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. பெறுகை வழிகாட்டியின் பிரிவு 3 இன் 3.3 ஆம் பந்தியின் பிரகாரம் குறைவான ஒப்பந்தக்காரர் காணப்படுகின்ற போது மட்டுமே மட்டுப்படுத்தப்பட்ட தேசிய கேள்வி (LNCB) கோரப்பட முடியும். எனினும் அதிகளவான ஒப்பந்தக்காரர்கள் காணப்பட்ட போதிலும் பெறுகை நிறுவனம் தேசிய போட்டி முறை (NCB) மூலம் கேள்வி கோரப்படாது மட்டுப்படுத்தப்பட்ட தேசிய கேள்வி முறை (LNCB) மூலம் கோரப்பட்டமையால் பெறுகை வழிகாட்டியின் பிரிவு 1.2.1 (ஈ)

பெறுகை நிறுவனம் தங்களது சபையாக இருப்பதனால் அதற்குரிய விளக்கங்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(அ)(ஆ)(இ)(ஈ)(உ)(ஊ)

ஐந்து மில்லியனுக்கு அதிகமான தொகை காரணமாக மேற்படி கேள்வி முறையானது உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம் ஓடாக கோரப்பட்டதுடன் இதற்கான தொழில்நுட்ப பகுப்பாய்வு நடவடிக்கையும் மேற்குறித்த திணைக்களம் ஊடாகவே இடம் பெற்றிருந்தது.

இன் நோக்கம் அடையப்பட்டிருக்கவில்லை.

ii. ஒப்பந்தக்காரரின் கேள்வித் தொகை கணக்கீட்டுத் தவறுகளைத் திருத்திய பின்னர் ரூபா 7,248,750 தொகையாக காணப்பட்ட போதிலும் இத்தொகையினைக் கருத்தில் கொள்ளாது ரூபா 6,749,486 தொகைக்கே சபையினால் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது.

iii. மதிப்பீட்டுத் தொகையை விட ஒப்பந்தக்காரரின் தொகை ரூபா 1,793,814 தொகையால் குறைவாக காணப்பட்டிருந்தமையால் தொழில்நுட்பப் பகுப்பாய்வுக் குழு பெறுகை வழிகாட்டியின் 7.9.11 இன் பிரகாரம் நடைமுறைகளை மேற்கொள்ளாது ஒப்பந்தத்தை வழங்குவதற்கு பரிந்துரை செய்திருந்தது.

iv. மதிப்பீட்டுத் தொகையை விட ஒப்பந்தக்காரரின் தொகை ரூபா 2,406,590 தொகையால் அதிகமாக காணப்பட்டிருந்தமையினை தொழில்நுட்பப் பகுப்பாய்வுக் குழு கருத்தில் கொள்ளாது ஒப்பந்தத்தை வழங்குவதற்கு பரிந்துரை செய்திருந்தது.

v. ரூபா 785,000 பெறுமதியான கீழ் குறிப்பிடப்பட்ட வேலைகள் கணக்காய்வுத் திகதியான 2018 மார்ச் 23 ஆம் திகதி வரை முற்றாக செய்யப்படாதிருந்த போதிலும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடமிருந்து கட்டுநிதியைப் பெறுவதற்காக அவ்வேலைகள் செய்யப்பட்டதாக கணியச்சிட்டையினை பொறுப்பான தொழில்நுட்ப உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தி குறித்த அமைச்சுக்கு அனுப்பியிருந்தது.

vi. இவ்வேலை 2018 சனவரி 12 ஆம் திகதி ஒப்பந்தக்காரரால் நிறைவு செய்யப்பட்டு சபைக்கு

கையளிக்கப்பட்டிருத்தல் வேண்டும். எனினும் கணக்காய்வுத் திகதியான 2019 மே 14 ஆம் திகதியன்று 76 வீதமான வேலைகள் நிறைவு செய்யப்படாதிருந்த போதிலும் சபையினால் ஒப்பந்தக்காரர் மீது மேலதிக நடவடிக்கை எதனையும் எடுத்திருக்காததுடன் ரூபா 674,948 தொகையான தாமதக்கட்டணம் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.